மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Makatpaarkanji Songs of Purananooru: A Study of Marxist Feminism

M. Vignesh,

M.A, Department of Tamil, Ariyalur, India

Manuscript ID : **MT426A0151**

Volume : **3**

Issue : **4**

Month : **December**

Year : **2023**

Received: 02.10.2023
Revised: 23.10.2023
Accepted: 02.11.2023
Published: 10.11.2023

Pages : 01-13

DOI: 10.5281/zenodo.10066385

ABSTRACT:

The ancient clan (Muthukudi mannar) desisting from giving their daughter in marriage to the king whom they don't hold as their equal, who then comes upon them in war. The king destroyed the places. This is the content of the songs of Makarparkanji. Marxsist Feminism is a new theoretical approach which is combined by Marxism and Feminism. When we exam the Makatpaarkaanji songs of Purananooru by the perspective of Marxisist Feminism, we know the State expansion also based on the body of Women. Kings will extend their imperial by the marrying daughter of Muthukudi Mannar. Mostly as Part of state expansion is the system of male dominance and ownership over women's bodies. We could identify the Makarpaarkanji songs of Purananooru, as changes in ancient clan society by integrated unites of Production – Surplus production, private property, expansion of state and control of women.

KEYWORDS:

Feminism, Marxist Feminism, Makatpaarkaanji, Purananooru, Arasu virivaakkam, Makatkodai

மார்க்சியப் பெண்ணிய நோக்கில் புறநானூற்று மகட்பாற்காஞ்சிப் பாடல்கள்

ம. விக்னேஷ்,
முதுகலை தமிழ் மொழி,
தமிழ்த்துறை, அரியலூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

மார்க்சியப் பெண்ணியம் என்பது மார்க்சியமும் பெண்ணியமும் இணைந்த புதிய கோட்பாட்டு அணுகுமுறை. இக்கோட்பாட்டின்வழி புறநானூற்று மகட்பாற்காஞ்சிப் பாடல்களை ஆய்வதன் மூலம் சங்க காலத்தில் அரசுவிரிவாக்கம் பெண்ணுடலை மையமாகக் கொண்டும் நடந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. வேந்தர்கள், வளம் மிக்க மருதநிலங்களையுடைய முதுகுடி மன்னர்களின் மகளை மணம் செய்வதன் மூலம் பேரரசை விரிவாக்கம் செய்துள்ளனர். முதுகுடி மன்னர்கள் வேந்தர்களுக்கு மகட்கொடையை மறுப்பதால் போர்நிகழ்கிறது. இப்போரையும் அதன் விளைவுகளையும் மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் முன்வைக்கின்றன. பெண்கள் மீது ஆணாதிக்கம் தனது அதிகாரத்தைச் செலுத்துவது, உரிமைகோருவதென்பது அரசு விரிவாக்கத்தின் பகுதியாகவே பெரும்பகுதி அமைகிறது என்று கூறவியலும். இவ்வாறு இனக்குழுச்சமூகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியாக உற்பத்தி - உபரி உற்பத்தி, சொத்து, தனியுடைமை, நில எல்லை விரிவாக்கம், பெண்ணைக் கட்டுப்படுத்தல் ஆகியன ஒன்றுடன் ஒன்று இணைந்து தொடர்வதை மகட்பாற் காஞ்சிப் பாடல்கள்வழி மார்க்சியப் பெண்ணிய நோக்கில் காணமுடிகிறது.

கருச்சொற்கள்

பெண்ணியம், மார்க்சியப் பெண்ணியம், மகட்பாற்காஞ்சி, புறநானூறு, அரசு விரிவாக்கம், மகட்கொடை

முன்னுரை

மார்க்சியப் பெண்ணியம், மார்க்சியப் பார்வையைப் பெண்ணியத்துடன் இணைக்கிறது. வரலாற்றுச்சூழலில் பெண் விளிம்புக்குத் தள்ளப்பட்டதும் பாலின ஒடுக்குதலுக்குரியதாக மாற்றப்பட்டதை விரிவாக ஆய்வு செய்கிறது. அத்தகைய பார்வையின் வழியாக ஆய்வை, மார்க்சியப் பெண்ணியம் பெண்முதன்மைவழியான சமத்துவத்தை முன்னெடுக்கிறது. அந்த வகையில் நோக்க, பெண்ணுடலைத்

தன்வயப்படுத்தல், மணத்தல் என்பதன் மூலமும் அரசு விரிவாக்கம் நிகழ்ந்துள்ளது என்பதைப் புறநானூற்று மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் கூறுகின்றன என்று கூறவியலும்.

வரலாற்றுநிலை மாற்றங்கள்: வேட்டைச் சமூகம் - அரசு விரிவாக்கம்

வரலாற்றில் நிகழ்ந்த பாலின வேறுபாட்டிற்கும் அதிகாரச் செயல்பாட்டின் தொடக்கத்திற்கும் உற்பத்தி அடிப்படைக் காரணியாக இருக்கிறது. உற்பத்தியை மையமிட்டே அனைத்துப் பொருளாதர நடவடிக்கைகளும் அமைகின்றன. வரலாற்று நிலையில் தாய்வழிச் சமூகத்திலிருந்து தந்தைவழிச் சமூக மாற்றத்திற்கும் உற்பத்திக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஏனெனில் உற்பத்தி - உபரி உற்பத்தி, சொத்து முதலிய கருத்தாக்கங்கள் அதிகாரத்தைக் கட்டமைக்கின்றன.

வேட்டைச் சமூகத்தில் பெண், பிள்ளைப் பேற்றின் காரணமாக வேட்டைக்குச் செல்ல இயலாத நிலை ஏற்பட்டது. இக்காலத்தில், ஆண் வேட்டைக்குச் செல்லுதலும் பெண் பிள்ளைப் பராமரிப்பு முதலிய காரணங்களினால் தங்குதலும் உருவாயிற்று. இந்நிலையில்தான் பெண் வேளாண்மையை, உணவு உற்பத்தியைக் கண்டறிந்தாள் என்கின்றனர் ஆய்வாளர்கள். இந்த உற்பத்தியும், உற்பத்தி நிலமும் உடைமையாகப் பின் மாறத்தொடங்கின. உற்பத்தியும், பிள்ளைப்பேறும், குழந்தை வளர்ப்பும் முக்கியமானவைகளாயின. இதை எங்கெல்ஸ், "குழந்தைவளர்ப்பே ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்பட்ட முதல்வேலைப் பிரிவினையாகும். ஒருதாரமணமுறையால் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏற்பட்ட பகைமையிலிருந்துதான் வரலாற்றில் முதல்முறையாக வர்க்கப்பகைமை உருவானது. ஆண் பெண்ணை ஒடுக்குவதிலிருந்துதான் முதல்வர்க்க ஒடுக்குமுறை தோன்றியது" **(கோவிந்தசாமி.வே & நடராஜ்: 1998: ப.131)** என்கிறார். குழந்தை வளர்ப்பும் ஒருதாரமணமுறையும் வர்க்க ஒடுக்குமுறைக்கு அடிப்படையாகிறது. இதன் தொடர்ச்சியில் பாலின ஒடுக்குதலும் வருகிறது.

வேட்டைச்சமூகம், இனக்குழுச்சமூகம், அரசுருவாக்கப் படிநிலைகள் குறித்தும் சமச்சீரற்ற பொருளாதார வளர்ச்சி நிலைகளிலுமாகப் பழந்தமிழ்ச் சமூகத்தை சிவத்தம்பி, மாதையன் போன்றோர் ஆய்வு செய்துள்ளனர். மகட்பாற்காஞ்சிப் பாடல்களின் உள்ளடக்க அமைப்பியல் நிலையில் குளோரியா சுந்தரமதியும் அரசுருவாக்கத்தின் பின்னணியில் பெ. மாதையனும் விரிவாக ஆய்ந்துள்ளனர். இங்கு அரசுருவாக்கத்தின் பின்னணியில் பார்ப்பது முதன்மையாகிறது. அவ்வகையில் இனகுழுக்கழுக்கிடையேயான மோதல்களில் இருந்தும் மருத நில உபரி உற்பத்தியின் எழுச்சியில் இருந்தும் அரசுருவாக்கத்தின் தீவிரம் வரலாற்றில் நடந்திருக்க வேண்டும். இந்நிலையில் வேந்தர்கள் அரசுருவாக்கத்தின் மேலாதிக்கம் மருத நிலத்தின்மீது

நிகழ்ந்திருக்கிறதைச் சங்க இலக்கியங்களும் குறிப்பாக மகட்பற்காஞ்சிப் பாடல்களும் எடுத்துரைக்கின்றன.

இனக்குழு எச்சங்களைத் தாங்கியவர்களாகச் சீறூர் மக்கள் இருந்திருப்பதைக் காணமுடிகிறது. இவர்களின் நிலங்கள் புன்செய் நிலங்களாகவே இருந்தன. வேட்டைச் சமூகத்திலிருந்து பெண்களின் பிள்ளைப் பராமரிப்பும், வேளாண் உற்பத்தியும் பெண் ஒடுக்குமுறைக்கும் தந்தைவழிச் சமூக உருவாக்கத்திற்கும் சொத்துரிமைச் சமூக உருவாக்கத்திற்கும் அடிகோலியது. ஆனால் இனக்குழுவில் உபரி உற்பத்தி முறை காணப்படவில்லை. காரணம் அங்கே புன்செய் நிலமாகவே காணப்பட்டது தினை, வரகு போன்றவையே அதிக அளவில் வேளாண்மையாகக் காணப்பட்டது. எனவே, இனக்குழுச் சமூகத்தில் ஆண்கள் வேட்டையாடவும் பின் போருக்கும் செல்கின்றார்கள். ஆனால் பெண்கள் வேளாண்மை, வீட்டு வேலைகள், குழந்தை வளர்ப்பு போன்ற செயல்களில் ஈடுபடுகின்றார்கள்.

பாலியல் அடிப்படையில் பிள்ளைப்பேறு குழந்தை வளர்ப்புச் செயல்களில் ஈடுபடுவதன் மூலம் பெண்களின் உழைப்புச்சக்தியை ஆண்கள் கட்டுப்படுத்துவதே ஆணாதிக்க முறைமையின் பொருண்மை அடிப்படையாக அமைந்துள்ளது. அத்தியாவசியமான உற்பத்தி மூலங்களில் இருந்து பெண்களைப் புறந்தள்ளி வைப்பதன் மூலமும் பெண்களின் பாலியலைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் அவர்கள் மீதான தமது கட்டுப்பாட்டை ஆண்கள் நிலைநாட்டுகிறார்கள் என்று கூறும் கிராம்சியின் கருத்துமூலம், பாலியல் வழியாக ஆணாதிக்கம் நிலைநாட்டப்படுவது உணர்த்தப்படுகிறது. இதன் மூலம் இந்த ஆணாத்திக வடிவமானது குடும்ப அமைப்புக்குள் முழுமையாக அதிகாரம் செலுத்தக் கூடியதாகவும் உருவாகிறது. இதனால் ஆண்கள் மேலானவர்களாகவும் பெண் கீழான நிலைக்கு உள்ளாக்கப்படுவதையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

பெண்ணை ஒடுக்குதல், நிலத்தைக் கையகப்படுத்தல் இரண்டிற்கும் வரலாற்றுரீதியான தொடர்ச்சியைக் காணவேண்டும். உற்பத்தி என்று வருகின்றபோதே சொத்து, தனியுடைமை என்கின்ற கருத்தாக்கமும் உருவாகிவிட்டது. அந்நிலையில் அரசுருவாக்கத்தின் பகுதியாக வேந்தர்களும் முல்லை நிலத்தின் வன்புலத்தைச் சார்ந்த சீறூர் மன்னர்களும் இணைந்து முதுகுடி மன்னர்மீது போர்தொடுக்கின்றனர். சீறூர் மன்னர்கள் வேந்தர்க்கு உதவியாய் உள்ளனர். இவர்கள் போர்புரியக் காரணம் முதுகுடி மன்னர்களின் நிலமானது உபரி உற்பத்தியைக் கொண்ட நிலமாகக் காணப்படுகிறது. சீறூர் மன்னர்கள் வேந்தர்களுடன் இணைந்து கொள்வதற்குக் காரணம் அவர்களின் பொருளாதார நெருக்கடியே முக்கியக் காரணமாக அமைகின்றது. இதன் பொருட்டு வேந்தர்களுடன் இனைந்து முதுகுடி மன்னர்களை எதிர்த்துப் போர் செய்கின்றனர்.

வேந்தர்கள் முதுகுடி மன்னர்களை நோக்கிப் படையெடுத்தலின் காரணம் முதுகுடி மன்னர்கள் மருத நிலத்தலைவர்களாக இருந்தமையே. இதன் மூலம் இனக்குழுச் சமூகத்திலே அரசு என்ற தோற்றம் உருவாகி இருப்பது தெரியவருகிறது. வேந்தர்கள் மருதநிலங்களைக் கைப்பற்றுவதன் மூலம் தங்களின் நிலங்களை விரிவாக்கம் செய்து கொள்கிறார்கள். இங்கேதான் அரசுவிரிவாக்கம் நடைபெறுகிறது. இதற்காக இவர்கள் முதுகுடி மன்னர்களின் மகளைத் திருமணம் செய்வதன் மூலம் நிலங்களைக் கைப்பற்றிக்கொள்கிறார்கள். நில எல்லை விரிவும் பெண்கேட்டலும் இணைவதன்மூலம் பாலின ஒடுக்குமுறைக் கருத்தாக்கம் மேலெழுவதை இதன்மூலம் பார்க்க முடிகிறது.

வேந்தர்களை எதிர்த்து மகட்கொடை மறுத்து முதுகுடி மன்னர்கள் போர் செய்கிறார்கள். மகட்கொடை மறுத்தலை மகட்பாற்காஞ்சி விரிவாகத் தெரிவிக்கிறது. அத்துடன் பெண்கள் மீது ஆணாதிக்கம் தனது அதிகாரத்தைச் செலுத்துவதையும் இதன்மூலம் உணரமுடியும். இந்த வகையில் பெண் பாலின (திருமணம்) ஒடுக்கு முறைக்கும் ஆணாதிக்க ஒடுக்கு முறைக்கும் உள்ளாவதைக் காணமுடியும். இவ்வாறு இனக்குழுச்சமூகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியாக உற்பத்தி - உபரி உற்பத்தி, சொத்து, தனியுடைமை, நில எல்லை விரிவாக்கம், பெண்ணைக் கட்டுப்படுத்தல் ஆகியன ஒன்றுடன் ஒன்று தொடர்ச்சியாகவும் இணைந்தும் வருவதைப் பார்க்க முடிகிறது. இந்த அடிப்படையில் மகட்பாற் காஞ்சிப் பாடல்களை மார்க்சியப் பெண்ணிய நோக்கில் காணமுடியும்.

அரசுவிரிவாக்கமும் மகட்பாற்காஞ்சியும்

புறநானூற்றில் மொத்தம் 20 மகட்பாற் காஞ்சிப் பாடல்கள் உள்ளன. புறநானூறு 336 வது பாடல் முதல் 356 வது பாடல் வரை மகட்பாற்காஞ்சி என்ற துறைக்குறிப்பு உள்ளது. ஆனால் 356வது பாடல் மகட்பாற்காஞ்சிப் பொருண்மையில் இல்லை. எனவே 20 பாடல்கள் (336-335) மகட்பாற்காஞ்சிப் பாடல்களாகின்றன. இப்பாடல்களில் அனைத்தும் முதுகுடி மன்னர்களுக்கும் வேந்தர்களுக்குமான மோதல்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

இவர்களுக்கான மோதல் என்பது பெண் கேட்டல் x பெண் மறுத்தல் போராகவே காணப்படுகிறது. பெண்ணைக் கைப்பற்றுவதன் மூலம் நிலங்களைக் கைப்பற்றுவதாக அமைகின்றது. இதை, பெ.மாதையன், “முதுகுடிமன்னரின்மேல் நடந்த படையெடுப்பிற்கும் மகட்கொடை வேண்டல் என்பது தலைமைக் காரணம் அல்ல. மருதநிலமே அடிப்படை நோக்கமாய் இருந்திருத்தல் வேண்டும்” **(மாதையன்.பெ. 2010: ப. 77)** என்கிறார். இதன் அடிப்படையில் மகற்பாகாஞ்சிப் பாடல்களை, நிலத்தை விளைநிலமாக மாற்றுதல், போரெடுத்து நிலத்தைக் கைப்பற்றல், மகட்கொடை வேண்டி நிலம் பெறுதல் என வகைசெய்கிறார். ஆக உபரி உற்பத்தியால் மருத நிலத்தைக்

கைப்பற்றல் என்பதே மைய நோக்கமாகிறது. அதன் பகுதியாக மணவுறவு முதன்மைக்கு வருகிறது. இங்கு வேந்தர்களை எதிர்க்கக் கூடியவர்களாகவும் வேந்தர்களுக்கு நிகரான செல்வ வளம் பொருந்தியவர்களாகவும் முதுகுடி மன்னர்கள் இருக்கிறார்கள். வேந்தர்களின் செல்வத்தை மதிக்காதவர்களாகவும் இருக்கிறார்கள். இந்நிலையில் முதுகுடி மன்னர்கள் வேந்தர்களைவிடச் செல்வாக்குடையோர்கள் என்பதும் புலனாகிறது. அதற்குக் காரணம் மருத நிலத்தின் உபரி உற்பத்தியே. இந்நிலையில்தான் முல்லைநிலச் சீறூர் மன்னர்களின் உதவியோடும் படைபலத்தோடு போரிட்டும் மகட்கொடையின் மூலமாகவும் வேந்தர்கள் தங்கள் அரசதிகார எல்லையை விரிவு செய்கிறார்கள்.

சங்க காலம் இனக்குழுச்சமூகங்களின் எச்சங்கள் நிலவிய காலகட்டம் எனக்கூறும் மாதையன், “சீறூர்மன்னர் சமுதாயத்தில் கூட்டுண்ணுதல் எனும் இனக்குழுப் பண்பு நிலவிதைப்போல் முதுகுடி மன்னர் சமுதாயத்தில் இணைமண முறை நிலவியுள்ளது. இதனால்தான் இக்குடியினர் வம்பவேந்தர் எனப்பட்ட மூவேந்தர் குடிகளுடன் திருமண முறை வைத்துக்கொள்ளவில்லை” (**மாதையன். பெ.** 2010: **ப.** 69) என்கிறார். சோமசுந்தர பாரதியாரும், “குடித்தொன்மையில் ஒவ்வா நிலையில் ஒத்தானாகக் கருதி மகள் கொள்ளப் படையொடு வந்த மன்னனொடு தொல்குடி மகளைப்படுத்தலஞ்சி அதை விலக்க அவள் தன்னையர் வந்தவனொடு தம்முயிரைப் பொருட்படுத்தாது பொரும் மகட்பாற்காஞ்சியும்” (**வெள்ளை வாரணன்**: 2001) எனக் கூறுகிறார். ஆகவே, முதுகுடி மன்னரிடத்தில் இருந்த இணைமண முறைக்கு வெளியே உள்ள வேந்தர்களுக்கு மணவுறவு விலக்கப்பட்டது. ஆனால் வேந்தர்களுக்கு நிலவிரிவாக்கமே அடிப்படை நோக்கம். வேந்தர்களுக்கு இணைமணமுறை போன்ற வரைமுறைகள் இல்லை. இப்பண்பினால் முந்தைய இனக்குழுக்களிடையே இருந்த பிற இனக்குழுக்களுடனான பாலுறவு விலக்கல் கருத்தைக் கடந்து பலதாரமணமுறையும், பிறநாட்டுப் பெண்களைக் கொண்டிமகளிராக்கலும் என்கிற பல நிலைகளில் வேந்தர்கள் செயல்பட்டார்கள் என்பதை மானிடவியல் நோக்கில் விரிவாக ஆராயப்பட வேண்டும். எனவே வேந்தர்களுக்கு அடிப்படை நோக்கம் நிலம் கைப்பற்றலே என்பது புலனாகிறது.

சீறூர்மன்னர்கள் நிலமானது புன்செய் நிலமாகவே இருந்தது. இவர்கள் பொருளாதாரமே இவர்களின் பிரச்சனையாக இருந்து வந்துள்ளது. ஆதலால் வேந்தர்களுடன் இணைந்து வேந்துவிடு தொழிலில் ஈடுபடுகின்றனர். போரில் இவர்கள் வேந்தர்களுடன் ஈடுபடுவதால் மருதநிலங்களைத் தானமாகப் பெற்றனர். எனவே இவர்கள் இருவரும் இனைந்து முதுகுடி மன்னர்மீது போர் செய்தனர்.

“உற்பத்திச் சக்திகளின் மீது மனிதன் ஆதிக்கம் பெறுவதுதான் மனிதகுல முன்னேற்றத்தின் ஊற்றுக்கண்களாகும். இயற்கை நிலைமைகள், வரலாற்றுக்

கட்டங்கள், இவற்றில் அமைந்துள்ளன. வேறுபாடுகள், பல்வேறு வர்க்கங்கள் சமூக நிறுவனங்கள், பண்பாட்டுத்துறைகள் ஆகியவற்றின் வளர்ச்சி வேகத்திலும் வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றன. இதனால் வரலாறு முன்னேறுகிறபொழுது சமுதாயத்தின் ஓர் பகுதி அல்லது மற்றோர் பகுதியில் வேகமாகவோ வளர்ச்சி காணப்படும்" (**மாதையன்: ப.** 2010: **ப.** 40) என்ற சிவத்தம்பியின் கூற்றின்படி நோக்க உபரி உற்பத்தி நிலமாகிய மருத நிலத்தின் மீதான வேந்தர்களின் அரசுவிரிவாக்க ஆதிக்கப் போக்கின் ஒரு பகுதியாகவே மகட்பாற்காஞ்சியைப் பார்க்கவியலும். எனவே இயற்கை நிலங்களைக் கைப்பற்றுதலே முக்கியமான ஒன்றாகப் பார்க்க முடிகிறது.

"வர்க்க விரோதங்களைக் கட்டுக்குள் வைக்க வேண்டியதன் அவசியத்திலிருந்து அரசு தோன்றியமையாலும் அதே சமயத்தில் அவர்களுக்கிடையே நடந்து வந்த மோதல்களின் மத்தியிலிருந்தே தோன்றியமையாலும் அது பொது விதியாகவே ஆக, மிகவும் வலிமை வாய்ந்த பொருளாதார வகையில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் அரசாக ஆகிறது; அந்த வர்க்கம் அரசின் மூலமாக அரசியலிலும் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாக ஆகிறது" (**கோவிந்தசாமி.வே & நடராஜ்**: 1998: **ப.** 53) என்கிற எங்கெல்ஸின் கருத்தை இணைத்து நோக்க, அரசுருவாக்கம் என்பது சமூகத்தில் அதிகாரம் பெற்ற ஒரு குழுவாக வேந்தர்கள் உருவாகி வருவதைப் பார்க்க முடிகிறது. "சங்க காலத்தில் சிறுசிறு குலங்களாகவும் குலங்களின் இணைப்புகளாகவும் சிதறிக்கிடந்த தமிழகத்து மக்கள் ஓயாத போர், படையெடுப்பு, ஊர் அழிவு, அரசுரிமைச் சண்டை ஆகியவற்றின் அடிப்படையிலே சங்ககாலத் தமிழகத்திலே மெல்லமெல்ல அரசுகள் தோன்றலாயின சங்க காலத்தில் அரசு செலுத்திய பேரரசரும் தொடக்கத்தில் சிறு கூட்டத்தினருக்குத் தலைவராக இருந்திருத்தல் வேண்டும்" (**மாதையன். பெ.** 2010: **ப.** 87).

இந்நிலையில் வேந்தர்கள் அதிகாரக் குழுவாக வரலாற்றில் மாறி, முதுகுடி மன்னர்களை ஒடுக்கும் நிலையில் செயல்படுகிறார்கள். இந்த ஒடுக்குதல் போர் நிலையிலும், மகட்கொடைமூலம் மென்மையான வழியிலுமென இரண்டு நிலைகளில் நடக்கிறது. மகட்கொடை வேண்டல், மறுத்தல் என்பன இவ்வாறான நிலைமைகளில்தான் வருகின்றன. பெண்ணை மணத்தல் மூலம் உற்பத்தி நிலங்களைக் கைப்பற்றுதல் என்பதாகிறது. இங்கு, உற்பத்திநிலத்தைக் கைப்பற்றல் எனும் பொருளியல் நடவடிக்கையும் பெண்ணுடலைக்கைப்பற்றுதல் எனும் பாலின ஒடுக்குதல் நடவடிக்கையும் ஒருசேர இணைவதைக் காணமுடியும். இவ்வாறான நிலைகளில்தான் பெண்ணுடல் புனைவும், மகட்கொடை வேண்டலும் மறுத்தலும், போரும், அழிவுமாக மகட்பாற்காஞ்சிப் பாடல்களின் பொருண்மைகள் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. இந்த வகையில் உற்பத்திச் சக்தியாகிய நிலத்தைக் கைப்பற்றல் என்பது பாலின ஒடுக்குதலின் வழியாக நிறைவேற்றமடைகிறதை மகட்பாற்காஞ்சிப்பாடல்கள்

வெளிப்படுத்துகின்றன எனக் காணமுடியும். இவ்வாறாக மார்க்சியப் பெண்ணிய நோக்கில் மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் இங்கு ஆய்வு செய்யப்படுகின்றன.

மார்க்சியப் பெண்ணிய நோக்கில் மகட்பாற்காஞ்சிப் பாடல்கள்

வரலாற்று நிலையில் அரசுவிரிவாக்கமும் ஆணாதிக்கமும் ஒன்றுடனொன்று இணைந்து செயல்படுகின்றன என்பதற்கு மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் வெளிப்படையான சான்றுகளாகின்றன. மார்க்சியப் பெண்ணிய நோக்கில் இத்தகைய பார்வையை அடைய இயலும். இந்த அணுகுமுறையின் அடிப்படையில் மகட்பாற்காஞ்சிப் பாடல்களை அவற்றின் பொருண்மைகளை உட்கொண்டு,

- பெண்ணுடலும் உற்பத்தி நிலமும் இணைதல் - மறுத்தலினால் போர் (நிலவளம் மறைமுகமாக வரல்)
- பெண்ணுடலை விரும்பல், (மகட்கொடை கேட்டல்) - உடன்படலும் மறுத்தலும்
- புலமை மரபின் அதிகாரச் சார்பும் முதுகுடி மன்னர் அழிவுக்கு இரங்கலும்

என மூன்று நிலைகளில் பகுத்தாராய இயலும்.

பெண்ணுடலும் உற்பத்தி நிலமும் இணைதல் - மறுத்தலினால் போர்

சொத்துரிமை, குடும்ப அமைப்பு, தந்தைவழி ஆணாதிக்கக் கருத்தியல் மேலோங்கிய சமுதாயத்தில் அரசு விரிவாக்கம் என்பது அதிகாரச் செயல்பாடாக நடக்கிறது. முதுகுடி மன்னரின் மகளை மணத்தல் மூலம் அவர்கள் உறவுடையவராகின்றனர். இதன்மூலம் வேந்தர்கள் தங்களின் நில எல்லையை விரிக்கின்றனர். அதாவது உபரி உற்பத்தி மருத நிலத்தைத் தன்வயமாக்கும் ஒரு தந்திரச் செயல்பாடாக மகட்கொடை வேண்டல் நடக்கிறது. முதுகுடி மன்னர்கள் இணைமண உறவுடையவர்களாலும் புதிய வேற்று அதிகார வேந்தர் குழுவை ஏற்காமையாலும் போர் நடக்கிறது. இங்கு ஆணாதிக்கத்தின் தந்திரச் செயல்பாடு மறுக்கப்படுகிறது. அதாவது ஆணாதிக்கச் சிந்தனையின் பெண்ணைக் கைப்பற்றுதல் என்பது நிலத்தைக் கைப்பற்றலாக அமைகிறது. இந்நிலையில்தான் பெண்ணுடலை உற்பத்தி நிலத்தோடு இணைத்தும் புனைந்தும் கவிதைகள் அமைகின்றன.

> **“…………………..தெண்ணீர்ப்**
> **பொய்கை மேய்ந்த செவ்வரி நாரை**
> **ஏமம்சால் சிறப்பினிப் பணைநல் லூரே”** (352)

இவ்வாறு தெளிந்த பொய்கையும், நாரைகளும், காஞ்சியும், வயல்வெளியும் சூழ்ந்த சிறப்புடைய மருதநிலம் என்பது இயற்கைவளமும் உபரி உற்பத்திக்காண

நீர்வளமும் கொண்டதாகக் காட்டப்படுகிறது. இத்தகைய நிலத்தைக் கைப்பற்றுதலே வேந்தரின் நோக்கமாகிறது. இந்நிலையில்தான் பெண்ணுடலை இயற்கை, வயல், நகரோடு ஒப்பிடல் வருகிறது.

"பாரி பறம்பின் பனிச்சுனை போல...
பெண்மை நிறைந்த பொலிவொடு" (337)

என்ற இப்பாடல் பாரியின் பனிச்சுனை மிக்க காவலையுடையது. அதைப்போல இவள் நலமும் இருக்கிறது என்கிறது. இங்கு பனிச்சுனையாகிய இயற்கை நீர்நிலை பெண்ணுடலுடன் இணைக்கப்படுகிறது. அத்துடன்,

"நேரிழை யுருத்த பல்சுணங் கணிந்த / மருப்பிள வனமுலை ஞெமுக்கு வோரே"

என வெளிப்படையாகப் பெண்ணுடல் இணைக்கப்படுகிறது. இங்கு இயற்கை நீர்நிலையோடு பெண்ணுடலை இணைத்துக் காணும் பார்வை என்பது பெண்ணுடலும் இயற்கையும் நிகராக்கப்பட்டு கைப்பற்றுதல், நுகர்தல், ஒடுக்குதல் என்பதாகிறது.

"உணங்குகல னாழியிற் றோன்றும்
ஓரெயின் மன்ன னொருமட மகளே" (338)

இக்கவிதையின் கவித்துவம், 'கதிர்கடல்நடுவே கட்டப்பட்ட மரக்கலம் போன்றவள்' என வருகிறது. இந்த அழகியல் பெண்ணுடலை உற்பத்தி நிலமாகிய கதிர்க்கழனியொடு ஒப்பிடுதலாகிறது. இதன்மூலம் ஒருசேரப் பெண்ணுடலும், உற்பத்தி மருதக் கழனியும் கைப்பற்றப்படும் பொருள்களாக முன்வைக்கப்படுகின்றன. இங்கு ஆணாதிக்கமும் வேந்தரின் நிலம் கைப்பற்றும் அதிகாரமும் ஒருசேர இணைவதைக் காணமுடிகிறது.

நகருடன் பெண்ணுடலை ஒப்பிடல்

"ஏர்பரந் தவய னீர்பரந்த செறுவின்....
நெடுவே ளாதன் போந்தை யன்ன,
பெருஞ்சீ ரருங்கொண் டியளே" (338)

என, ஏருழுத வயல், நெல்நிரம்பிய வீடுகள், பொன் நிறைந்த தெருக்கள் எனச் சிறப்பு பொருந்திய ஆதன் என்பவனின் போந்தை நகர்போன்ற செல்வமுடையவள் என்கிறது கவிதை. இங்குப் பெண்ணுடல் இயற்கை, நிலம், வயல் ஆகியவற்றோடு ஒப்புமை செய்து அதை நுகர்தல், கைப்பற்றுதல் என்று வருவதுபோல நகருடனும் ஒப்புமைப்படுத்தப்படுகிறது. இதன்மூலம் நகரைக் கைப்பற்றுதலும் பெண்ணைக் கைப்பற்றுதலும் ஒன்றாக்கப்படுகிறது.

இதைப்போலவே "வண்கை எயினன் வாகை அன்ன இவள்நலம்" (352) என்றும், தழும்பன் ஊரன்ன நலம் (348) என்றும் உறையூர் நலத்துடன் ஒப்பிட்டல் (352) என்றும் வருகின்றன. இவ்வாறே, கூந்தல் நலம் அகுதை நகருக்கும் (347) ஒப்புமையாக்கப்படுகிறது.

இயற்கை, நிலம், நகர் ஒப்புமையின்றி பெண்ணுடலைச் சேரல் - மணத்தல் எனும் பொருளில் ஒரு பாடல் வருகிறது.

"சுணங்கணி வனமுலை யவளடு நாளை
மணம்புகு வைக லாகுத லொன்றோ
ஆரம ருழக்கிய மறங்கிளர் முன்பின்
நீளிலை யெஃக மறுத்த வுடம்பொடு
வாரா வுலகம் புகுத லொன்றெனப்
படைதொட் டனனே குருசில்" (341)

என்று சுணங்கணிந்த வனமுலையை உடையவளோடு மணம் புரிவேன் அல்லது துறக்க உலகம் புகுவேன் என வஞ்சினம் கூறுதலாக இப்பாடல் வருகிறது. இங்கு உற்பத்தி நிலம் முதலிய கருத்தியல்கள் வரவில்லை.

இவ்வாறு இயற்கை நிலத்துடனும் உற்பத்தி நிலத்துடனும் நகருடனும் பெண்ணுடல் ஒப்புமைப்படுத்தப்படுவதென்பது, பெண்ணுடலை நுகர்வு உடலாகப் பார்க்கும் ஆணாதிக்கக் கருத்தியல் மேலோங்கி இருத்தலையே காட்டுகிறது. ஆக உற்பத்தி நிலமும் பெண்ணும் நிகராக்கப்படுதல் என்பது தந்தைவழி அரசதிகாரத்தின் செயலாகிறது. பெண்ணுடலை நுகர்வு உடலாகக் கவிதைகள் முன்வைக்கின்றன. இயற்கையும், உற்பத்தி நிலமும் பெண்ணும் அதிகாரம் செய்யப்படுவதற்கு உரியனவாகப் புலமை மரபு முன்வைக்கிறது.

பெண்ணுடலை விரும்பல் (மகட்கொடை கேட்டல்) - உடன்படலும் மறுத்தலும்

வேந்தர்கள் மகட்கொடை வேண்டல் என்பது முதுகுடி மன்னரின் மருதநிலத்தைக் கைப்பற்றல் என்றாகிறது. இங்கு மகட்கொடை மறுத்தல் என்பது அதற்கு இணங்காமையாகிறது. முதுகுடி மன்னர்கள் புதிதாக உருவாகிய வேந்தருக்கு மகட்கொடை தராமைக்கான காரணங்களைக் கவிதைகள் முன்வைக்கின்றன.

ஒத்தார்க்கும் புரையோர்க்குமன்றித் தராமை

"முழங்குகடன் முழவின் முசிறி யன்ன
நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்,
புரைய ரல்லோர் வரையல ளிவளெனத்
தந்தையுங் கொடாஅன்" (343)

இதில் புரையோர் என்பதற்கு, 'ஒப்போரும் உயர்ந்தோரும்' என்கிறார் ஔவை. துரைசாமிப்பிள்ளை. தமக்கு நிகரானவர் அல்லது நற்பண்பினால் மேம்பட்டவரையன்றி மணக்கமாட்டாள் இவள் எனக் கருத இயலும்.

"நிரலல் லோர்க்குத் தரலோ வில்லென" (345) என்பதில், 'குடிமை, ஆண்மை முதலியவற்றில் ஒவ்வாதார்' என்கிறார் ஔவை. துரைசாமிப் பிள்ளை. சோமசுந்தர பாரதி, பெ. மாதையன் போன்றோரின் தம் குலத்திற்கு வேறான பிறரை மணக்க மாட்டார்கள் எனும் கருத்தை இங்கு இணைத்து நோக்க இயலும். தமக்கு ஒவ்வாதவராக இருப்பின் மூவேந்தரேயாயினும் (338), உறந்தை நகர் கொடுத்தாலும் (352) பெண் தரமாட்டார்கள். அதைப்போலவே எளியார்க்கும் பெண் தரமாட்டார்கள் (342). ஏனெனில் இவர்களே செல்வச் செழிப்புள்ளவர்கள் (353).

வேண்டிய வேந்தர்க்குத் மகட்கொடை நேரலும் அரசுவிரிவாக்கமும்

"கொற்ற வேந்தர் வரினுந் தற்றக
வணங்கார்க் கீகுவ னல்லன்" (338)

என, 'வெற்றிபெருந்திய வேந்தர் வந்தாலும் தன் தகுதிக்கேற்ப தன்னை வணங்கி இரந்து கேட்பவர்க்கன்றி மகட்கொடையைத் தந்தை நேரான்' என்கிறது கவிதை. இதன்மூலம் வேந்தர் வேண்டிக் கேட்டு மகட்கொடை நேரும் நிலைக்கு முதுகுடிமன்னர்கள் இருந்திருக்கிறார்களென்றும் மகட்கொடைமூலம் அரசு விரிவாக்கம் நடந்திருக்கிறது என்றும் கருதமுடியும்.

"இரும்பனை யன்ன பெருங்கை யானை
கரந்தையஞ் செறுவிற் பெயர்க்கும்
பெருந்தகை மன்னர்க்கு வரைந்திருந் தனனே (340)

இப்பாடலில், 'யானையை வீழ்த்தும் மன்னர்க்கு மகளை மணமுடித்தான் தந்தை' என வருகிறது. இதன்மூலம் போரில் வேந்தர்கள் முதுகுடிமன்னர்களை வெற்றிகொண்டு அவர்கள் மகளை மணந்தனர் என்றும் அல்லது அதன்பின் மகட்கொடை நேர்ந்தனர் என்றும் சொல்ல இயலும்.

போரினால் முதுகுடி மகளை மணத்தல்

"துறைநணி மருதத் திறுக்கு மூரொடு,
நிறைசால் விழுப்பொரு டருத லொன்றோ
புகைபடு கூரெரி பரப்பிப் பகைசெய்து,
பண்பி லாண்மை தருத லொன்றோ
இரண்டினு ளொன்றா காமையோ வரிதே" (344)

இப்பாடல் மகட்கொடை தந்தால் மருத நிலமும் விழுப்பொருளும் தருவேன் என்றும் இல்லையேல் ஊரழியும் என்றும் வேந்தன் எச்சரிப்பதாக அமைகிறது. இப்பாடல் மூலம் வேந்தர்களின் அரசதிகார விரிவாக்கம் முதுகுடிமன்னரின் மகளைக் கைப்பற்றல் எனும் நிலைக்குச் சென்றதாகவும் பார்க்க முடியும்.

இவ்வாறான பாடல்கள் மூலம் உற்பத்தி நிலத்தைக் கைப்பற்றல் நோக்கில் மகட்கொடை வேண்டலும் மறுத்தால் போர் புரிதலும் ஆகிய நிலைமைகளில் வேந்தர்கள் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதை உணரமுடிகிறது. அரசதிகாரத்தின் உற்பத்தி நிலத்தைக் கைப்பற்றலும் பெண்ணுடலைக் கைப்பற்றலும் இவ்வாறு ஒன்றுடனொன்று இணைந்து செல்வதைக் காணமுடிகிறது.

புலமை மரபின் அதிகாரச் சார்பும் முதுகுடி மன்னர் அழிவுக்கு இரங்கலும்

மகட்பாற்காஞ்சிப் பாடல்களை 12 புலவர்கள் பாடியுள்ளனர். இதில் 339வது பாடலைப்பாடிய புலவர் பெயர் தெரியவில்லை. இப்புலவர்கள் வேந்தர்களுக்கு அறமுறைத்தல் போன்ற நிலைகளில் செயல்படவில்லை என்பதையே பாடல்களின் போக்குகள் காட்டுகின்றன. அதன் மறுதலையாக, தாயைப் பழித்தல், பெண்ணைக் காரணம் காட்டல், ஊரழிவுக்கு இரங்கலும் மகட்கொடைக்கு வலியுறுத்தலும் ஆகிய நிலைகளிலேயே பாடல்கள் அமைந்துள்ளன.

தாயைப் பழித்தல்

“.........................விறன்மலை
வேங்கை வெற்பின் விரிந்த கோங்கின்
முகைவனப் பேந்திய முற்றா இளமுலைத்
தகைவளர்த் தெடுத்த நகையொடு
பகைவளர்த் திருந்த இப் பண்பி றாயே” (336)

இந்தப் பாடல், ‘வேந்தர்கள் போர்தொடுத்து வருகின்றனர். அதற்கு அடிப்படைக் காரணம் தாய், மகளைப் பெற்றதே’ என்கிறது. இதன்மூலம் பரணர் புதிய அதிகாரம் பெற்ற வேந்தரின் சார்பு நிலையில் இருக்கிறார். அதாவது வேந்தனுக்கு அறிவுரை சொல்லாமல் முதுகுடித் தாயைப் பழிக்கிறார்.

பெண்ணைக் காரணம் காட்டல்

போருக்குக் காரணம் முதுகுடி மன்னன் மகளே, அவள் நலமே எனும் பொருண்மையில் மூன்று பாடல்கள் உள்ளன.

"மரம்படு சிறுதீப் போல
அணங்கா யினடான் பிறந்த வூர்க்கே" (349)

மதுரை மருதனிலநகனாரின் இப்பாடல் ஊர் அழிவுக்கு, 'மரம்படு சிறுதீ மரத்தின் அழிவுக்குக் காரணம்போல இவளே ஊரழிவுக்குக் காரணம் என்கிறது. அதைப்போலவே, "பேணுநர்ப் பெறாஅது விளியும் புன்றலைப் பெரும்பாழ் செயுமிவ ணலனே" (346) எனும் பாடலும் இவள் நலன் ஊரைப் பாழ்செய்யும் என்கிறது. இவ்வாறு வேந்தர்க்கு அறனுரைக்காது புலவர்களின் கவிதைகள் முதுகுடிமன்னன் மகளைப் பழிக்கும்படியாக அமைந்துள்ளன.

ஊரழிவுக்கு இரங்கலும் மகட்கொடைக்கு வலியுறுத்தலும்

"என்னா வதுகொ றானே.....
ஏமம்சால் சிறப்பினிப் பணைநல் லூரே" (351)

தந்தை மகட்கொடை மறுத்தலால் சிறப்பு பொருந்திய ஊர் என்னாகுமோ என்கிறது இக்கவிதை. இதன்மூலம் ஊர் அழிவுக்கு இரங்கும் புலவர், வேந்தர் சார்பிலிருந்து முதுகுடி மன்னருக்கு மகட்கொடையைத் தரச்சொல்கிறார் எனலாம். இவ்வாறே வேந்தனின் வஞ்சினத்தால் ஊரழியும், மகட்கொடை நேராமையால் ஊரழியும் என்றெல்லாம் புலவர்கள் பாடுகின்றனர்.

புலவர்கள் வேந்தர்களின் சிறப்பையும் இப்புலவர்கள் வேந்தர்க்கு அறிவுரை சொல்லவில்லை. வேந்தர்களின் சிறப்பையும் தொல்குடிமன்னர் சிறப்பையும் ஒருசேரச் சொன்னாலும், வேந்தரின் புதிய அதிகாரச் சார்பையே புலமைமரபு கொண்டிருக்கிறது. அச்சார்பிலிருந்து மறைமுகமாக முதுகுடிமன்னரை அடிபணியச் சொல்கிறது, அடிபணியாமல் அழியும் ஊருக்கு வருந்துகிறது. இவ்வாறான நிலையில் புலவர்களின் பாடல்கள் அமைவதைப் பார்க்க முடியும்.

முடிவுரை

சொத்துரிமை, தந்தைவழி, அரசுவிரிவாக்கச் சமூகத்தில் உற்பத்தி நிலமும் பெண்ணுடலும் ஒன்றாக இணைக்கப்பட்டு இரண்டையும் கைப்பற்றல் ஆதிக்கம் செலுத்துதல் எனும் நிலையில் மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் அமைகின்றன. முதுகுடி மன்னர்கள் இதற்கு உடன்படாமையால் போர் நேர்கிறது. இப்போருக்குக் காரணம் பெண்ணின் நலமே எனப்பாடல்கள் சொன்னாலும் அதன் உட்பொருள் நிலத்தைக் கைப்பற்றலே என்பதை உணர முடிகிறது. அத்துடன் முதுகுடிமன்னர் அழிவுக்கு இரங்கினாலும் புலமைமரபு வேந்தர் சார்பு நிலையிலேயே செயல்படுவதையும் காணமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. வே, கோவிந்தசாமி, & நடராஜ். *(மொழிபெயர்ப்பு) மார்க்சியம் பெண்ணியம் உறவும் முரணும்*. கோவை, விடியல் பதிப்பகம், 1998.
2. ஔவை, துரைசாமிப் பிள்ளை, உரையாசிரியர். *புறநானூறு*. சென்னை, கழக வெளியீடு, 1968.
3. பெ, மாதையன். *சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம்*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2010.
4. க, வெள்ளைவாரணன். *தொல்காப்பியம் புறத்திணையியல் உரைவளம்*. மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 2001.
5. ந, முத்துமோகன், பதிப்பாசிரியர். *மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள்*. சென்னை, தொகுதி 12, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2018.
6. குளோரியா சுந்தரமதி. *இலக்கியக் கல்வியும் பகுப்பாய்வும்*. சிதம்பரம், மெய்யப்பன் பதிப்பகம், 2001.

REFERENCES

1. V, Govindasamy, & Nataraj. *(Translation), Marxsiyam Penniyam Uravum Muranum*. Coimbatore Vidiyal Publication, 1998.
2. Avvai, Duraisamypillai, Commentory. *Purananooru*. Chennai, Kazhaka Veliyeedu, 1968.
3. P, Madhaiyan. *Sanga Ilakkiyaththil Velan Samuthayam*. Chennai, NCBH, 2010.
4. K, Vellaivaaranan. *Tolkappiyam Purathinaiyiyal Uraivalam*. Madurai, Madurai Kamaraj University, 2001.
5. N, Muththumohan, Editor. *Marx Engels -Selected Books*. Chennai, Vol. 12, NCBH, 2010.
6. Gloriya Sundaramathi. *Ilakkiya Kalviyum Pakuppaaivum*. Chidambaram, Meyyappan Publication, 2001.